**Registered Office:**
"Maithri", No. 132,
Cathedral Road,
Chennai - 600 086,
India
CIN: L35999TN1936PLC002202

Tel: 91 44 2811 2472
URL:www.ranegroup.com

# Rane Holdings Limited

**//Online Submission//**

RHL/SE/036/2022-23

October 29, 2022

| | |
|---|---|
| **BSE Limited**<br>Listing Centre<br>Scrip Code: **505800** | **National Stock Exchange of India Ltd.**<br>NEAPS<br>Symbol: **RANEHOLDIN** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper publication of Un-audited Financial Results – Regulation 47 of SEBI LODR**

We hereby enclose copies of extract of the un-audited consolidated financial results of the Company for the quarter and half year ended September 30, 2022 (UFR) published on October 29, 2022, in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Hindu Tamizh Thisai' (Regional language).

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you.

Yours faithfully,

For **Rane Holdings Limited**

SIVA
CHANDRA
SEKARAN

Digitally signed by
SIVA
CHANDRASEKARAN
Date: 2022.10.29
11:25:31 +05'30'

**Siva Chandrasekaran**
Secretary

Encl: a/a

**பொன் மொழி:** தியாகம் செய்வது உயர்ந்த குணம். அதிலும், தியாகம் செய்தேன் என்ற எண்ணத்தையும் தியாகம் செய்வது மிகச் சிறந்தது.
- மகா பெரியவர்

**இணையம்:** அகமதாபாத் ஐஐஎம்–ல் பட்டம் பெற்றவரால் தொடங்கப்பட்ட இந்திய கிஃப்ட்ஸ் இணையதளத்தில், பண்டிகைகள், நிகழ்வுகளுக்கான ஏராளமான பரிசுகள், பூக்கள், கேக், சாக்லேட், இனிப்புகள், பொருட்களை வாங்க முடியும். இதன் https://www.indiagift.in இணையதளத்தில், நம் விருப்பத்துக்கு ஏற்ற வடிவமைப்பில் பரிசுப் பொருளை ஆர்டர் செய்து பெறலாம்.

**பொது அறிவு:** ஜாம்ஷெட்ஜி டாடா முதன்முதலில் நாக்பூரில் காசித ஆலைதான் தொடங்கினார். பின்னர் எஃகு உற்பத்தியில் ஈடுபட்டார். அவரது தொழிற்சாலை தொடங்கப்பட்ட பகுதிக்கு ஜாம்ஷெட்பூர் என்று பெயர் வந்தது. பெங்களூரு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் (ஐஐஎஸ்) இவரால் தொடங்கப்பட்டது. மும்பையில் இவர் தொடங்கிய தாஜ் ஹோட்டல் உலகப் புகழ் பெற்றது.

### கோவை வழக்கை என்ஐஏவிடம் ஒப்படைத்ததில் தாமதம் இல்லை

# எந்த ஆதாரமும் அழிக்கப்படவில்லை

## ஆளுநருக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்

**தூத்துக்குடி**

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கை என்ஐஏவிடம் ஒப்படைத்ததில் தமிழக அரசு தாமதம் செய்யவில்லை. வழக்கு தொடர்பான எந்த ஆதாரமும் அழிக்கப்படவில்லை என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

கோவையில் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, "கோவை கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் நடந்த பிறகு, தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணைக்கு பரிந்துரைக்க தமிழக அரசு 4 நாட்கள் அவகாசம் எடுத்துக் கொண்டது தவறு. அவகாசம் வழங்கினால், தீவிரவாதிகள் அனைத்து தடயங்களையும் அழித்துவிட வாய்ப்பு உண்டு" என்று கூறினார்.

இந்நிலையில், அரசு சார்பில் இதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், தூத்துக்குடியில் தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று மாலை கூறியதாவது:

கோவையில் கடந்த 23-ம் தேதி காரில் சிலிண்டர் வெடித்த சம்பவம் நடந்த உடனேயே தமிழக காவல் துறையினர் துரிதமாக விசாரணை நடத்தினர். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் வீட்டில் சோதனை நடத்தியதுடன், அவரது கூட்டாளிகளையும் உடனடியாக கைது செய்தனர்.

சம்பவம் நடந்த உடனேயே மத்திய உளவுத்துறை (ஐ.பி.), தேசியபுலனாய்வுமுகமை (என்ஐஏ) அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். தொடர்ந்து ஐ.பி., என்ஐஏ உடன் இணைந்தே தமிழக காவல் துறை இந்த வழக்கை விசாரித்து வந்தது.

**முதல்வர் நேரடி கண்காணிப்பு**

விசாரணையை தமிழக முதல்வர் நேரடியாகவே கண்காணித்து வந்தார்.

இந்த சம்பவத்தில் பயங்கரவாத தொடர்பு இருப்பது தெரியவந்ததை அடுத்து, வழக்கு விசாரணையை என்ஐஏவிடம் தமிழக அரசு ஒப்படைத்தது.

வழக்கு தொடர்பான அனைத்து ஆதாரங்கள், ஆவணங்களும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தில் அனைத்து தகவல்களும், விவரங்களும் தொடர்ந்து மத்திய உளவுத் துறைக்கும், என்ஐஏவுக்கும் முறையாக தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது.

**என்ஐஏ பாராட்டு**

தமிழக காவல் துறையினர் நடத்திய விசாரணையை என்ஐஏ பாராட்டியுள்ளது. ஆனால், வழக்கை என்ஐஏவிடம் ஒப்படைப்பதில் தாமதம் செய்ததுபோல ஆளுநர் கூறியுள்ளார்.

எந்த மாநிலத்தில் எந்த சம்பவம் நடந்தாலும் ஆரம்பகட்ட விசாரணையை மாநில போலீஸார்தான் நடத்துவார்கள். அதன்பிறகே தேவையைப் பொறுத்து, மத்திய உளவுத்துறை மற்றும் என்ஐஏ விசாரணை நடத்துவார்கள். அவ்வாறே தமிழக காவல் துறையும் தற்போது வழக்கை என்ஐஏவிடம் ஒப்படைத்துள்ளது.

டெல்லி, மேற்கு வங்கம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக என்ஐஏ 10 நாட்கள் முதல் 3 மாதங்கள் கழித்தே வழக்கு பதிவு செய்துள்ளது.

**முறையாக ஒப்படைப்பு**

கோவை சம்பவத்தில் தமிழக அரசு எந்த தாமதமும் செய்யவில்லை. எந்த ஆதாரமும் அழிக்கப்படவில்லை. தமிழக காவல் துறை சேகரித்த ஆதாரங்கள் அனைத்தும் முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் எந்த காலகட்டத்திலும், சூழ்நிலையிலும், எந்த ஒரு தீவிரவாத, பயங்கரவாத செயல்களையும் முதல்வர் அனுமதிக்க மாட்டார். அதில் அவர் உறுதியாக இருக்கிறார். இத்தகைய செயல்கள் எந்த ரூபத்தில், எந்த வடிவத்தில் வந்தாலும் அதை விரட்டி அடிக்கும் உறுதி படைத்தவராக முதல்வர் இருக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

அமைச்சர் கீதாஜீவன், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

---

### கிராமசபை கூட்டம்போல

# நகர்ப்புற வார்டுகளில் பகுதி சபை கூட்டம்

## நவ.1-ல் தொடங்கி வைக்கிறார் முதல்வர்

**சென்னை**

கிராமசபை கூட்டம்போல, நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் வார்டு வாரியாக பகுதி சபை கூட்டம் நடத்தப்படுகிறது. உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு வரும் நவ.1-ம் தேதி பம்மலில் நடைபெறும் பகுதி சபை கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, இத்திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

தமிழகத்தில் உள்ள 12,525 கிராமங்களிலும் குடியரசு தினம் (ஜன.26), மே தினம் (மே 1), சுதந்திர தினம் (ஆக.15), காந்தி ஜெயந்தி (அக்.2) ஆகிய நாட்களில் கிராமசபை கூட்டம் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு முதல் நவ.1-ம் தேதி உள்ளாட்சி தினத்தன்றும் கிராமசபை கூட்டம் நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஊரக உள்ளாட்சிகளில் கிராமசபை கூட்டம் நடத்தப்படுவதுபோல, நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் வார்டு குழு அமைத்து, வார்டு வாரியாக பகுதி சபை கூட்டங்களை நடத்த தமிழக அரசு கடந்த ஜூன் மாதம் அரசாணை வெளியிட்டது. அந்த அடிப்படையில், வார்டுதோறும் வரும் நவ.1-ம் தேதி உள்ளாட்சி தினத்தில் பகுதி சபை கூட்டங்கள் நடைபெற உள்ளன.

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பம்மலில் 6-வது வார்டில் நடைபெறும் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, இக்கூட்டங்களை தொடங்கி வைக்கிறார். குறிப்பிட்ட வார்டு மக்களின் குறைகளை கேட்கும் முதல்வர், அதற்கு தீர்வு காணும் நடவடிக்கைகளையும் எடுக்க உள்ளார்.

---

### முதல்வர் ஸ்டாலினுக்கு மருத்துவ பரிசோதனை

**சென்னை**

சென்னை போரூரில் உள்ள ராமச்சந்திரா மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழக்கமான மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டார். பரிசோதனை முடிந்ததும் அவர் வீடு திரும்பினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த சில தினங்களாக உடல் சோர்வு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று மாலை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தொமுச நிர்வாகி நடராஜ் இல்ல திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார்.

பின்னர், வீடு திரும்பிய அவர், அங்கிருந்து போரூர் ராமச்சந்திரா மருத்துவமனைக்கு சென்றார். அங்கு அவருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதுகு வலி காரணமாக முதல்வருக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக்கு பிறகு நேற்று இரவே முதல்வர் வீடு திரும்பினார்.

---

### அத்திக்கடவு–அவிநாசி திட்டம்

# ஜனவரி இறுதிக்குள் செயல்பாட்டுக்கு வரும்

## அமைச்சர் துரைமுருகன் உறுதி

**சென்னை**

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தில் 97 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த ஆண்டு ஜனவரி இறுதிக்குள் அந்த திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீர்வளத்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை தலைமைச் செயலகத்தில், நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் அத்திக்கடவு - அவிநாசி திட்டப் பணிகள், சேலம் சரபங்கா வடிநிலத்தில் உள்ள ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது: அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தில் தற்போது வரை 97 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ளன. குழாய் பதிக்கும் பணிகளில் 1,065 கி.மீ. தூரத்தில் 1,033 கி.மீ. தொலைவு வரை பணிகள் முடிந்துள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த கனமழை காரணமாக பணிகளை முடிப்பதில் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது. இருப்பினும் வரும் டிசம்பருக்குள் அனைத்துப் பணிகளையும் முடித்து, சோதனை ஓட்டம் நடத்தி, அடுத்த ஆண்டு ஜனவரி இறுதிக்குள் செயல்பாட்டுக்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், சேலம் மாவட்டம் சரபங்கா வடிநிலத்தில் உள்ள ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டத்தில் 87 சதவீதம் பணிகள் முடிந்துள்ளன. மீதமுள்ள பணிகளை 3 மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இக்கூட்டத்தில், துறை செயலர் சந்தீப் சக்சேனா, நிதித் துறை முதன்மை செயலர் பிரசாந்த் மு.வடநேரே, நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கு.ராமமூர்த்தி, கோவை மண்டல தலைமைப் பொறியாளர் பொ.முத்துசாமி, திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.ராமமூர்த்தி மற்றும் நீர்வளத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

### கோவையில் கார் சிலிண்டர் வெடித்த விவகாரம்

# பந்த் நடத்த பாஜக மாநில தலைமை அழைப்பு விடுக்கவில்லை

## உயர் நீதிமன்றத்தில் அண்ணாமலை தரப்பில் தகவல்

**சென்னை**

கார் சிலிண்டர் வெடித்த விவகாரம் தொடர்பாக கோவை மாவட்டத்தில் பந்த் நடத்த பாஜக மாநில தலைமை அழைப்பு விடுக்கவில்லை என்று உயர் நீதிமன்றத்தில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கு விசாரணை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கிடையே, இச்சம்பவத்தைக் கண்டித்து கோவை மாவட்டத்தில் அக்.31-ம் தேதி பந்த் நடத்த கோவை பாஜக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பந்த் நடத்த தடை விதிக்க கோரி கோவையை சேர்ந்த தொழிலதிபர் வெங்கடேஷ் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

நீதிபதிகள் பரேஷ் உபாத்யாய், டி.பரத சக்கரவர்த்தி அமர்வில் இந்த வழக்கு நேற்று அவசர வழக்காக விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், "இந்த முழு அடைப்பு போராட்டத்துக்கு கோவை காவல் துறையிடம் பாஜக அனுமதி பெறவில்லை. அனுமதியின்றி நடத்தப்பட உள்ள முழு அடைப்பால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். தொழில் துறை நஷ்டமடையும். எனவே, இந்த முழு அடைப்பு போராட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும்" என கோரப்பட்டது.

> என்ன போராட்டங்களை முன்னெடுக்கலாம் என கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். மாவட்ட நிர்வாகிகளால் அறிவிக்கப்பட்டுள்ள பந்த்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை

அப்போது, இந்த வழக்கில் எதிர் மனுதாரராக உள்ள தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தரப்பில் வழக்கறிஞர் ஆர்.சி.பால் கனகராஜ் ஆஜராகி, "கோவையில் நடத்தப்பட உள்ள பந்த்துக்கு மாநில தலைமை அழைப்பு விடுக்கவில்லை. மாவட்ட பாஜகதான் அழைப்பு விடுத்துள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து பந்த் நடத்துவதா அல்லது வேறு என்ன வகையான போராட்டங்களை முன்னெடுக்கலாம் என்பது குறித்து நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். மாவட்ட நிர்வாகிகளால் அறிவிக்கப்பட்டுள்ள பந்த்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், "கோவையில் அக்.31-ம் தேதி பாஜக சார்பில் முழு கடையடைப்பு போராட்டம் நடத்தப்பட்டால் போலீஸார் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்" என காவல் துறைக்கு அறிவுறுத்தி, வழக்கு விசாரணையை நவ.1-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.

---

### வதந்திகளை நம்ப வேண்டாம்

# குரூப் 2 தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாகும்

## டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

**சென்னை**

குரூப் 2 தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும். இதுதொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

தமிழக அரசுத் துறைகளில் காலியாக உள்ள 5,529 பணியிடங்களை நிரப்புவதற்கான குரூப் 2 மற்றும் 2ஏ முதல்நிலைத் தேர்வு, கடந்த மே 21-ம் தேதி நடந்தது. இத்தேர்வை 9 லட்சத்து 94,878 பேர் எழுதினர். தேர்வுகள் முடிந்து 4 மாதங்கள் ஆகியும் இதுவரை முடிவு வெளியாகாததால் தேர்வர்களிடம் அதிருப்தி நிலவுகிறது.

இந்நிலையில், குரூப் 2 தேர்வு விடைத்தாள்கள் சேதமடைந்துவிட்டதால்தான் முடிவுகள் வெளியீட்டில் தாமதம் நிலவுவதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது.

இந்நிலையில், இதுகுறித்து விளக்கம் அளித்து டிஎன்பிஎஸ்சி செயலர் உமா மகேஸ்வரி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான குரூப் 2, 2ஏ முதல்நிலைத் தேர்வு கடந்த மே 21-ம் தேதி நடந்தது. இதற்கிடையே, மகளிருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவது தொடர்பாக பல்வேறு வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தன. இந்த வழக்குகளில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பாக பல்வேறு கட்ட ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி, உயர் நீதிமன்ற உத்தரவுகளை செயல்படுத்துவதற்கு ஏற்ப மென்பொருளில் மாற்றங்கள் செய்யும் பணி முடியும் நிலையில் உள்ளது. அப்பணிகள் முடிந்த பிறகு, குரூப் 2, 2ஏ தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும்.

எனவே, இதுகுறித்து சமூக வலைதளங்களில் பரவும் ஆதாரமற்ற தகவல்களை தேர்வர்கள் நம்ப வேண்டாம்.

அதிகாரப்பூர்வமான தகவல்களுக்கு தேர்வாணையத்தின் https://www.tnpsc.gov.in இணையதளத்தை மட்டுமே அணுக வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### தமிழக விவசாயிகளிடம் இருந்து

# 19% வரை ஈரப்பதமுள்ள நெல் கொள்முதல்

## மத்திய அரசு அனுமதி

**சென்னை**

தமிழகத்தில் 19 சதவீதம் வரை ஈரப்பதமுள்ள நெல்லை கொள்முதல் செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த ஆண்டு மழை அதிகமாக இருப்பதால், விவசாயிகளிடம் இருந்து 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய அனுமதிக்குமாறு மத்திய உணவுத் துறைக்கு தமிழக உணவுத் துறைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் கடந்த அக். 10–ல் கடிதம் எழுதினார். இதையடுத்து, மத்திய உணவுத் துறை, மத்திய தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் தமிழகத்தில் ஆய்வு நடத்தினர். அவர்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், கொள்முதல் செய்யும் நெல்லின் ஈரப்பதத்தை 17–ல் இருந்து 19 சதவீதமாக உயர்த்தி மத்திய அரசு அறிவித்துள்ளது.

புதுப்பொலிவு பெற்றுள்ள நெல் கொள்முதல் நிலையம்.

மேலும், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் சாதாரண, சன்னரக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையையும் நிர்ணயித்துள்ளது. அதன்படி, ஈரப்பதம் 17 சதவீதமாக இருந்தால் சாதாரண ரக நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டாலுக்கு ரூ.2,040, சன்ன ரகத்துக்கு ரூ.2,060 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஈரப்பதம் 17–18 சதவீதம் இருந்தால், சாதா ரகத்துக்கு ரூ.2,019.60, சன்ன ரகத்துக்கு 2,039.40 என்றும், ஈரப்பதம் 18–19 சதவீதம் இருந்தால், சாதா ரகத்துக்கு ரூ.1,999.20, சன்ன ரகத்துக்கு ரூ.2,018.80 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்துடன், மாநில அரசின் ஊக்கத்தொகையாக சாதாரண ரகத்துக்கு ரூ.75, சன்ன ரகத்துக்கு ரூ.100 சேர்த்து விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

கடந்த செப். 1–ம் தேதி முதல் நேற்று வரை 1,500 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 1.05 லட்சம் விவசாயிகளிடம் இருந்து 7.67 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகளுக்கு ரூ.1,398 கோடி வழங்கப்பட்டுள்ளதாக தமிழக உணவுத் துறை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், நிரந்தர கொள்முதல் நிலையங்களில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு, புதுப்பொலிவு பெற்று வருகின்றன. 2,400 ரேஷன் கடைகளுக்கு ஐஎஸ்ஓ தரச் சான்று பெறப்பட்டுள்ளது என்று உணவுத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

---

### வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நவம்பரில் 4 நாட்கள் சிறப்பு முகாம் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பு

**சென்னை**

தமிழகத்தில் உள்ள 69 ஆயிரம் வாக்குச் சாவடிகளிலும் நவம்பர் 12, 13 மற்றும் 26, 27 ஆகிய 4 நாட்களில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடத்தப்படும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி நடந்து வருகிறது. சமீபத்திய நிலவரப்படி, 60 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் ஆதார் விவரங்களை வாக்காளர் பட்டியலுடன் இணைத்துள்ளனர். வாக்காளர் பதிவு அலுவலர்கள் வீடு வீடாக சென்று ஆதார் விவரங்களை பெற்று 'கருடா' செயலியில் பதிவு செய்து வருகின்றனர்.

இதனிடையே, தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, வரும் நவ.9-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்று முதல் ஒரு மாதத்துக்கு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் நடக்க உள்ளன. 2023 ஜன.1-ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு 18 வயது நிறைவடைந்தவர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கலாம். இதற்கான படிவத்தை பெற்று பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் தாலுகா அலுவலகங்களில் உள்ள வாக்காளர் பதிவு அதிகாரியிடம் வழங்கலாம். தேசிய வாக்காளர் சேவை போர்ட்டல் (https://www.nvsp.in) அல்லது கைபேசி செயலி மூலமாகவும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கலாம். இதுதவிர, பெயர் நீக்கம், முகவரி மாற்றம், தொகுதிக்குள் முகவரி மாற்றம் உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்ளலாம்.

வேலைக்கு செல்வோரின் வசதிக்காக சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம்கள் நடைபெறும். அதன்படி, தமிழகத்தில் உள்ள 69 ஆயிரம் வாக்குச் சாவடிகளிலும் நவ.12, 13 மற்றும் 26, 27 ஆகிய நாட்களில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இதில் பொதுமக்கள் கலந்துகொண்டு, பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், திருத்தம் தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

---

Newspaper: Business Standard
Language: English
Edition: All editions
Date of Publication : October 29, 2022



# LIC plans bonus shares to shore up faltering stock

## Insurer also eyeing higher dividend to regain investor confidence

NIKUNJ OHRI
28 October


Life Insurance Corporation of India (LIC) is planning to transfer nearly $22 billion from policyholders' funds into a fund earmarked to pay dividends or issue bonus shares, two sources said on Friday, as the country's largest insurer aims to shore up both its own net worth and investor confidence.

The state-owned insurer listed on stock exchanges in May, but its stock has since dropped by more than 35 per cent, wiping off nearly ₹2.23 trillion in investor wealth.

LIC is now looking at steps to revive its share price, said a government official, who did not want to be named. The company plans to transfer ₹1.8 trillion ($21.83 billion), a sixth of the ₹11.57 trillion lying in its non-participating fund, to its shareholders' fund, according to an official aware of the matter.

Life insurance companies primarily sell two types of products: the first are 'participating policies' where profits are shared with customers and second are 'non-participating,' or 'non-par,' policies that have fixed returns. LIC parks the premium it collects from the latter in a non-participating fund.

Transferring some of that into the shareholders' fund is one way to shore up investor confidence as it would be an indicator of higher dividend payouts in the future, both the officials said.

The surplus in the non-participating fund is earmarked for shareholders and can be transferred to shareholders' fund with approval from LIC's board, which is yet to be sought, they said.

The transfer, if concluded, would boost LIC's net worth by about 18 times from its current value of about ₹10,500 crore and top the net worth chart among insurers, including SBI Life and HDFC Life, both the officials said. LIC and finance ministry did not immediately respond to emails from *Reuters* seeking comment.

A bigger shareholder fund would draw the attention of new and existing investor as the amount would be used by LIC to transfer dividend or issue bonus shares in future, said Harvinder Singh, a partner at law firm DSK Legal.

LIC shares were priced at ₹949 a piece during listing but are currently trading below ₹600.

Seven of nine brokerages covering the stock have 'buy' or 'strong buy' rating, with the median price target of ₹840, according to Refinitiv data.

"The move would increase the book value per share and may help in improving the sentiment around LIC's shares, but could keep the upside limited," said Ankur Wahal, senior vice president at BOB Capital Markets. **REUTERS**

- Life insurers sell two types of products: 'participating policies' where profits are shared with customers and 'non-participating,' or 'non-par,' policies that have fixed returns
- LIC parks the premium it collects from the latter in a non-par fund. Transferring some of that into the shareholders' fund is one way to shore up investor confidence
- The surplus in the non-par fund is earmarked for shareholders and can be transferred to shareholders' fund with approval from LIC's board, which is yet to be sought
- The transfer, if concluded, would boost LIC's net worth by about 18 times from its current value of about ₹10,500 crore and top the net worth chart among insurers

# OIL PRICES FALL AS CHINA WIDENS COVID RESTRICTIONS

Oil prices fell on Friday after top crude importer China widened its Covid-19 curbs, though benchmarks were poised for a weekly gain on supply concerns and surprisingly positive economic data. Brent crude futures dropped 87 cents, or 0.9 per cent, to $96.09 a barrel by 1309 GMT, having climbed by 1.3 per cent in the previous session. US West Texas Intermediate (WTI) crude futures were down $1.02, or 1.2 per cent, at $88.06.

Both benchmarks, however, were on course for a weekly rise of about 3 per cent.

Friday's declines came after Chinese cities ramped up Covid-19 curbs on Thursday, sealing up buildings and locking down districts in a scramble to halt widening outbreaks. China registered 1,506 new infections on October 27, the National Health Commission said on Friday, up from 1,264 new cases a day earlier.

The International Monetary Fund expects China's growth to slow to 3.2 per cent this year, a downgrade of 1.2 points from its April projection, after an 8.1 per cent rise in 2021. **REUTERS**

# NRIs can repatriate funds from sale of two houses

## For property bought as resident or inherited, up to $1 mn can be sent each year

BINDISHA SARANG

Non-resident Indians (NRIs) who rent or sell real estate in India should understand the rules that govern taxation of rental income and capital gains. In most cases, the rules are similar to those that apply to resident Indians, but there are a few differences.

**Tax on rental income**

When a taxpayer (resident or NRI) owns more than two houses, any two chosen by her will be deemed to be self-occupied, assuming they are not rented out. No income tax is payable on those two self-occupied properties.

If the taxpayer has more than two houses that are not rented out, the rest will be deemed to be rented out. Suresh Surana, founder of RSM India, says, "Income from deemed to be let-out property is computed in a similar manner as in the case of let-out property."

Explaining the rules on the remaining houses if they're rented out, Maneet Pal Singh, partner at IP Pasricha & Co, says, "If actual rent is received, it will be taxable on accrual basis subject to the calculation of gross annual value prescribed in the income tax law."

YOUR MONEY

**Taxation of capital gains**

Both resident Indians and NRIs are taxed similarly on capital gains from the sale of residential property. The rate depends on the holding period. The gains are treated as long term if the NRI held the property for more than two years. If not, the gain is treated as short term.

Surana says, "Under Section 112, long-term capital gains are taxed at the rate of 20 per cent after indexation. Short-term capital gains are taxed at the slab rate applicable to the NRI taxpayer."

**Tax Deducted at Source (TDS)**

When an NRI sells a property after two years, the buyer must deduct TDS at the rate of 20 per cent. If it is sold before two years, a TDS rate of 30 per cent becomes applicable.

Archit Gupta, chief executive officer, Clear says, "In case the NRI's total income is below the taxable limit, and he is claiming exemption on capital gain, he may submit a low or nil TDS deduction certificate to the buyer so that no TDS is deducted and he is saved from the hassle of claiming a refund." An NRI can avail of tax exemption on capital gains by investing this amount.

**Tax relief on borrowed funds**

If an NRI borrows money to acquire or construct a house, he must complete the acquisition or construction within five years from the end of the financial year in which the loan was taken to get the benefit of tax deduction.

Singh says, "The interest portion of the loan is eligible for deduction under Section 24 subject to a maximum of ₹2 lakh in the case of a self-occupied property. The principal portion is eligible for deduction under Section 80C."

According to Surana, Section 24(b) does not restrict interest deduction in case of loan taken from foreign banks. But Section 80C benefit is available only on loans taken from Indian banks and housing finance companies.

**Rules for remitting money**

Gupta warns that NRIs must comply with FEMA (Foreign Exchange Management Act) regulations while remitting money from India. NRIs can repatriate the proceeds from the sale of a residential property in India, provided they meet a few conditions.

Surana says, "The immovable property should have been acquired by the seller in accordance with the provisions of the foreign exchange law in force at the time of acquisition. The payment should have been made in foreign exchange received through banking channels or out of funds held in FCNR(B) account or NRE (non-resident external) account. And not more than two such properties qualify."

Surana adds, "If the property was acquired by the non-resident when he was resident in India, or was inherited from a resident Indian, then the sale proceeds can be repatriated up to $1 million per financial year."

### BUILDING BLOCKS

Calculating income from house property for taxation

(Amount)

| Particulars | Let-out property | Deemed to be let-out property |
|---|---|---|
| Municipal value of property | A | A |
| Fair rent of property (based on rentals in neighbourhood) | B | B |
| Higher of municipal value and fair rent | C (Higher of A & B) | C (Higher of A & B) |
| Standard rent (as per Rent Control Act) | D | D |
| Reasonable expected rent = Lower of (A) and standard rent | E= Lower of C and D | E= Lower of C and D |
| Actual rent (amount received) | F | Not applicable |
| Gross annual value (higher of reasonable expected rent and actual rent) | G (higher of E or F) | G (same as E) |
| Less: Municipal taxes paid during the year | (H) | (H) |
| Net annual value (NAV) | I=G-H | I=G-H |
| **Less: Deductions under Section 24** | | |
| 1. Standard deduction under Section 24(a) @ 30% of NAV | (J) | (J) |
| 2. Deduction under Section 24(b) on account of interest on borrowed capital | (K) | (K) |
| Income from house property | L=I-J-K | L=I-J-K |

Source: RSM